# பெலிஅத்த பிரதேச சபை
# அம்பாந்தோட்டை மாவட்டம்

----------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 26 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பெலிஅத்த பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழே காட்டப்பட்டுள்ள கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக செலுத்தவேண்டிய ரூபா 1,891,808 கூட்டுத்தொகையான செலவினம் நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் ரூபா 871,942 செலவில் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த திண்மக் கழிவுப்பொருள் மீள்சுழற்சி செயற்திட்டத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த அறையின் பெறுமதி நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 1,027,679 கூட்டுத்தொகையான நிலுவை வாடகை தொடர்பான பதிவேடுகளும் காலப்பகுப்பாய்வும் ரூபா 120,652 கூட்டுத்தொகையான வெளிக்கள இருப்பு தொடர்பான இருப்பு பதிவேடும் பட்டோலைகளும், முன்னாள் தலைவரின் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த தனிப்பட்ட வாகனத்திற்கு செலுத்திய ரூபா 844,340 கூட்டுத்தொகையான செலவினம் தொடர்பான ஒவ்வொரு நாளிலும் செய்யப்பட்ட கடமைகள் தொடர்பான விபரங்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங் களுடனான தொடர்பு | | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2015 மே 21 ஆந் திகதிய 15/நானாவித (051) ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் | தொடர்புடைய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்காத வகையில் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் விளையாட்டு விழாவிற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 186,400 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2014 நவம்பர் 12 ஆம் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 07 ஆம் பிரிவு | தொடர்புடைய ஏற்பாடுகளுக்கு இணங்காமல் சபையினால் 5 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டு 2014 நவம்பர் 24 ஆந் திகதி முதல் 2015 யூன் 08 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காக ரூபா 322,445 ஆன சம்பளங்களும் படிகளும் நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,189,127 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 264,134 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,924,993 ஆன அதிகரிப்பொன்று தென்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய பட்டியலிடப்பட்ட ரூபா 29,133,511 ஆன மொத்த மீண்டெழும் வருமானத்தில் ரூபா 20,388,415 அறவிடப்பட்டிருந்ததுடன், வருமான அறவீட்டின் செயன்முன்னேற்றம் 70 சதவீதமாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 24,147,171 ஆன நிலுவை வருமானத்தில் ரூபா 8,314,583 ஆம் ஆண்டில் அறவிடப்பட்டிருந்தது. நிலுவை வருமான அறவீட்டின் செயன்முன்னேற்றம் 34 சதவீதமாக இருந்தது.

## 2.2.2 ஆதனவரி

நிலுவை ஆதனவரி மற்றும் வாடகை என்பவற்றை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையால் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ஆதன வரி மற்றும் வாடகை மீதி ரூபா 1,156,379 ஆக இருந்தது.

## 2.2.3 வாடகை

கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய தபபா/பபாகொ/2010/01 ஆம் இலக்க தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 01, 02 மற்றும் 04 ஆம் பந்தகளின் பிரகாரம் திறந்த கேள்வி நடைமுறைகளைப் பின்பற்றுதல் மற்றும் முறையான சபை நியமமொன்றின் பிரகாரம் குத்தகையாளரைத் தெரிவுசெய்தல், கடைகளை மதிப்பிடுதல், ஒரே தடவையில் பணத்தைப் பெற்றுக்கொள்ளல் போன்ற தேவைப்பாடுகள் நிறைவேற்றப்படாமல் பண்டாரவத்த பொதுச் சந்தையில் 20 கடைகளும் நூலக சிகிச்சை கட்டிடத்தில் 25 கடைகளும் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) சுற்றறிக்கையின் 04 ஆம் பந்திக்கு இணங்காமல் 2001 ஆம் ஆண்டிலிருந்து 2015 மார்ச் வரையான காலப்பகுதியில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 33 கடைகளுக்காக ரூபா 8,653,915 கூட்டுத்தொகையான ஒரே தடவையில் பணத்தை அறவிடுதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் தாமதம் காணப்பட்டது.

## 2.2.4 இயந்திர உபகரண வருமானம்

கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் பெகோ இயந்திரம், மோட்டார் கிறேடர், லொறி, பவுசர் மற்றும் கலி பவுசர் என்பவற்றை வாடகைக்கு வழங்கியதற்காக ரூபா 1,027,679 மற்றும் மீளாய்வாண்டிற்காக ரூபா 42,800 கூட்டுத்தொகையான அறவிடப்பட வேண்டிய போதிலும், அந்த நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்படி (அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 75,350 கூட்டுத்தொகையான தொகையொன்று சபையில் சேவையீடுபட்டிருந்த ஒருவரிடமும் உறுப்பினரொருவரிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய வேண்டியிருந்தது.

## 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 224,960 நீதிமன்றத் தண்டப் பணமாகவும் ரூபா 11,914,011 முத்திரைக் கட்டணமாகவும் கிடைக்க வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 132(ஓ) பிரிவின் பிரகாரம் அமைச்சரின் எழுத்துமூல முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் 2014 க.பொ.த. (சா.த) பரீட்சையை இலக்காக கொண்டு நடாத்தப்பட்ட கருத்தரங்கு ஒன்றிற்கு உபசரிப்பு பொருட்களை வழங்குவதற்காக ரூபா 94,670 தொகை சபை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த 05 செலவின விடயங்களில் ரூபா 3,325,000 கூட்டுத்தொகையான முழு நிதிஏற்பாட்டையும் மேலும் 05 செலவின விடயங்களில் ரூபா 80,528,736 கூட்டுத்தொகையான சேமிப்புக்களும் எல்லையை விஞ்சிய இன்னுமொரு செலவின விடயமொன்றில் ரூபா 3,123,472 செலவினமும் 02 வருமான விடயங்களில் அடையப் பெறாத ரூபா 84,210,859 ஆன இலக்கும் காணப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

### 4.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

சபையின் தும்பு ஆலை செயற்திட்டத்தில் உற்பத்தி நடவடிக்கைகள் 2014 பெப்ரவரி மாதத்திலிருந்தும், துண்டுக் கல் உற்பத்தி வேலைத்தளத்தில் உற்பத்தி நடவடிக்கைகள் 2015 யூன் மாதத்திலிருந்தும் செயற்படுத்தப்படமையால் அச்செயற்திட்டங்களுக்குரிய சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

#### (ஆ) கையேற்கப்படாத சொத்துக்கள்

முன்னைய ஆண்டின் போது சபை நிதியத்திலிருந்து ரூபா 1,048,600 தொகை செலவு செய்து 14 மடிக் கணனிகள் கொள்வனவு செய்து சபையின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், சபையின் முன்னாள் தலைவருக்கு வழங்கப்பட்டிருந்த மடிக் கணனி இயந்திரம் 2016 ஏப்ரல் 11 ஆந் திகதி வரையிலும் சபைக்கு மீண்டும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (இ) கையேற்கப்படாத சொத்துக்கள்

சபையினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் மூன்று கெப் வண்டிகளினதும், கலி பவுசரினதும் மோட்டார் கிறேடரினதும், கை உழவு இயந்திரத்தினதும் டேலரினதும் லொறி, பவுசரினதும் கை உழவு இயந்திரத்தினதும் பதிவு உரித்தை கையேற்பதற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5.** **முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்